Regulated Markets and Super Markets in the State.

*168 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state the amount of grant given by the Central Government to run the regulated markets and the Super markets for the past five years in Tamilnad?

அங்காடிகளும், சூப்பர் மார்க்கட்டுகளும்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு சட்ட—கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினவுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழகத்தில் ஒழுங்குபடுத்திய அங்காடிகளும், சூப்பர்மார்க்கட்டு களும் நடத்த மத்திய சர்க்கார் சென்ற ஐந்து ஆண்டுகளில் கொடுத்த மான்யம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : ஒழுங்குபடுத்திய அங்காடிகள் (Regulated Markets) ஏற்படுத்துவதற்காக மத்திய அரசு கடந்த ஐந்து ஆண்டுகளில் மான்யம் ஒன்றும் தரவில்லை.

சிறப்பு அங்காடிகள் (Super Markets) ஏற்படுத்துவதற்காக மத்திய அரசு இதுவரை ரூ. 9,42,750 (ரூபாய் ஒன்பது இலட்சத்து, நாற்பத்து இரண்டாயிரத்து, எழு நூற்றைம்பது) மான்யமாக வழங்கியிருக்கிறது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, சூப்பர் மார்க்கெட்டு கள் ஜில்லா தலைநகரங்களில் சில இடங்களில் மட்டும் ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றன. ஒவ்வொரு முனிசிபல் நகரத்திலும், மதுரை ஜில்லா திண்டுக்கல், பழனி போன்ற இடங்களில் ஆரம்பிக்க திட்டம் போடப்படுமா? ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்குள்ளும் மக்களுக்குத் தேவையான பொருட்கள் சப்ளை செய்யும் வகையில் விஸ்தரிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன்: ஏற்கெனவே 5 சூப்பர் மார்க்கெட்டு கள் தொடங்கப்பட்டு நடந்துவருகின்றன. மறுபடியும் வேறு நகரங்களில் எல்லாம் தொடங்கப்பட வேண்டுமென்று கருத்து அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டு, மத்திய அரசின் ஒப்புதலைப் பெற்றிருக்கிறோம். ஒவ் வொரு மாவட்டத்திலும், முக்கியமான நகரங்களில் தொடங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அண்மையில் வேலூரில் தொடங்கப்பட்டிருகிறது. மற்ற இடங்களிலும் தொடங்கப்பட இருக்கிறது.

திரு. கே. எஸ். அப்துல் வஹாப்: தலைவரவர்களே, 5 சிறப்பு அங்காடிகள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த ஐந்து அங்காடிகளிலும் சென்ற ஆண்டு ஏற்பட்ட லாப நஷ்ட கணக்கு விவரம் சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : அது பற்றிய விவரம் என்னிடம் இல்லை.

Embezzlement in Co-operative Department

*169 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state —

(a) the number of cases filed by the Co-operative Department of the Madras State during the period from 1st March 1967 to 31st August 1967 for embezzlement of funds, etc. ;

(b) the number of cases stayed ; and

(c) the number of cases withdrawn ?